
# தருமபுரியும் அகழ்வைப்பகமும்



ச. செல்வராஜ், எம். ஏ.,
தி. சுப்பிரமணியன், எம். ஏ.

தருமபுரியும் அகழ்வைப்பகமும்

# தருமபுரியும் அகழ்வைப்பகமும்


ஆசிரியர்

**ச. செல்வராஜ்,** எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர்

**தி. சுப்பிரமணியன்,** எம். ஏ.,
காப்பாட்சியர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-600 028

*1990*

முதற் பதிப்பு—1990
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 107

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# தருமபுரியும் அகழ்வைப்பகமும்

ஆசிரியர்

ச. செல்வராஜ், எம். ஏ,
தொல்பொருள் அலுவலர்

தி. சுப்பிரமணியன், எம். ஏ.,
காப்பாட்சியர்

விலை ரூ.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# பதிப்புரை

தருமபுரி என்னும் இவ்வூர் பழங்காலத்தில் தகடூர் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதிக்குத் 'தகடூர் நாடு' என்பது பெயராகும். சங்க காலத்தில் இப்பகுதியை அதிய மன்னர்கள் ஆட்சி செய்தனர். இம்மன்னர்களைப் பற்றிய முதற் செய்தி மௌரியப் பேரரசன் அசோகனது கல்வெட்டின் மூலம் தெரியவருவதாகும். அசோகன் தம் கல்வெட்டில் 'சத்யபுத்ரர்' என்று அதியமானைக் குறிப்பிட்டுள்ளான். தம் ஆட்சிப் பகுதிக்கு அருகிலுள்ள அண்டைப் பகுதியாக சோழ, பாண்டிய கேரளபுத்ரர்களின் நாடுகளைக் குறிப்பிடும்போது இச்சத்யபுத்ரர்களின் நாட்டைப் பற்றியும் தெரிவித்துள்ளான். ஆதலால் அசோகன் ஆட்சிக் காலத்திலேயே (கி.மு. 272 முதல் 232 முடிய) அதியமான்கள் இருந்து வந்திருப்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவ்வாறெனில் அவ்வதியமான்களைப் பற்றிக் குறிப்பிடும் சங்க இலக்கிய வரிகளும் ஏறக்குறைய அதே காலத்தைத்தான் சார்ந்திருத்தல் கூடும்.

இதற்கு மேலும் வலிவூட்டுவதாகச் சம்பையிலுள்ள அதியமான் கல்வெட்டு அமைந்துள்ளது. அக்கல்வெட்டில் 'சதிய புதோ அதியமான் நெடுமான் அஞ்சி' குறிக்கப்படுகிறான். அக்கல்வெட்டின் எழுத்தமைதியும் அசோகன் கல்வெட்டு எழுத்தமைதியும் ஒன்று போலவே காணப்படுவதால் அதியமான் காலத்தை அசோகன் காலத்துக்குக் கொண்டு செல்வதில் தவறில்லை என்று தோன்றுகிறது. அவ்வாறெனில் தமிழகத்தில் கிடைத்துள்ள பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்களுள் சிலவற்றின் காலம் அசோகன் காலத்தை விட முந்தையது என்று கொள்வது தவறாகாது. அண்மைக் காலத்தில் இலங்கையில் பண்டைத் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் சில அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. அவற்றின் காலம் கி.மு. எட்டு அல்லது ஏழாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அவ்வாறெனில் தமிழ்நாட்டுப் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்களுள் சில அசோகன் காலத்துக்கு முந்தியவை என்பது மேலும் உறுதியாகிறது.

அத்தகைய புதுமையான வரலாற்றைக் கொண்ட தருமபுரியின் வரலாற்றை இந்நூலில் ஆசிரியர்கள் பழைய கற்காலம் தொட்டே ஆய்ந்திருக்கிறார்கள். ஆங்காங்கே உரிய ஆதாரங்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளனர். அவர்களின் முயற்சி பாராட்டுக்கு உரியது. சிறிய நூலாயினும் தருமபுரிப் பகுதியின் வரலாறு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது போல உருவில் சிறிதாயினும் உரைப்பதில் விரிந்து செல்கிறது.

தமிழகத்தில் இத்துறை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வைப்பகம் அமைத்து வருகிறது. அந்த அடிப்படையில் தருமபுரியிலும் ஒரு அகழ்வைப்பகத்தை நிறுவியுள்ளது. இங்கு இவ்வகழ்வைப்பகம் அமைய இப்பகுதியின் ஆசிரியப் பெரு மக்கள் பெருந்துணை புரிந்துள்ளனர். அவர்களின் ஒத்துழைப்பும் அரவணைப்பும் அளவிடற்கரியது. அவர்களுக்கு இத்துறையின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையின் ஒவ்வொரு அகழ்வைப்பகமும் ஒவ்வொரு வகையில் சிறப்புடைத்து. தருமபுரி அகழ்வைப்பகம் 'வீரக்கல்' என்று இலக்கியங்களில் போற்றப்படும் நடுகற்களுக்குப் பெயர் போனது. இவ்வகழ்வைப்பகத்தில் பல காலத்தைச் சார்ந்த பல வகையான நடுகற்கள் காட்சியில் இடம் பெற்றுள்ளன. நடுகல் பற்றி ஆய்வு செய்வாருக்கு இவை அரிய கருவூலமாகும். இவைமட்டும் அல்லாது, அச்சுக் குத்தப்பெற்றக் காசுகள் முதல் பிற்காலக் காசுகள் முடியவும், ஓலைச் சுவடிகளும், அகழாய்வில் கண்டெடுத்த பொருள் களும், சுடுமண் பாவைகளும் எனப் பல அரிய பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வகழ்வைப்பகத்தைக் காண்பார் தருமபுரிப் பகுதியின் பண்டைய வரலாற்றையும், பண்பாட்டுப் பெருமையையும் அறிந்து மகிழ்வர். குறிப்பாக இப்பகுதியின் மக்கள் இக்காட்சிப் பொருட்களைக் கண்டு தம் முதாதையர்களின் பண்பாட்டுச் சிறப்பையும் நாகரிக மேன்மையையும் அறிதல் வேண்டுமென்பதே இத்துறையின் பேரவா.

அன்பன்

**நடன. காசிநாதன்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | தொல்பழங்காலம் | 1 |
| 2 | சங்ககாலம் | 7 |
| 3 | வரலாற்றுக் காலம் | 10 |
| 4 | பிற்காலத் தருமபுரி | 20 |
| 5 | அகழ்வைப்பகம் | 25 |
| 6 | புதிய கண்டுபிடிப்புகள் | 27 |

# தொல்பழங்காலம்

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்தைத் தொல்பழங் காலம் என்று கூறுவர். இந்த தொல்பழங்காலத்தில் கிடைக்கின்ற கற்கருவிகளின் தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை

1. பழையகற்காலம் 2. நுண்கற்காலம் 3. புதியகற்காலம்
4. பெருங்கற்காலம்.

## பழையகற்காலம்

காடுகளில் விலங்குகளுடன் விலங்குகளாக வாழ்ந்து வந்த பழையகற்கால மக்கள், காட்டிலுள்ள விலங்குகளை வேட்டையாடு வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் வேட்டையாடப் பயன்படுத்திய கற்கருவிகளுக்குப் பழையகற்காலக் கருவிகள் என்று பெயரிடப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற இராபர்ட் புரூஸ்புட் என்ற புவியியல் ஆய்வாளர் தமிழகத்தில் கொற்றலை ஆற்றங்கரையின் பகுதியில் பழைய கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார். இவர் 1882-இல் தருமபுரி மாவட்டத்தில் செய்த மேற்பரப்பாய்வின்போது இப்பகுதியிலும் பழையகற்காலக் கருவிகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன என்று கூறியுள்ளார். இதன் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின்போது கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள வரட்டனப்பள்ளி மலை அடிவாரத்தில் பழையகற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இங்கு கைக்கோடரிகள், சுரண்டிகள், கிழிப்பான்கள், முட்டை வடிவில் உள்ள (ஓவேட்) கருவிகள் ஆகியவை கிடைத்துள்ளன. கற் கருவிகளைச் செய்ததனால் ஏற்பட்ட சில்லுகள் ஏராளமான அளவில் காணப்படுகின்றன. இயற்கையாக அமைந்த மலைகளும் நீர்ச்சுனை களும் பழையகற்கால மக்களின் வாழ்விடங்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளன. தருமபுரி பகுதியில் பழையகற்கால மக்கள் சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துள்ளார்கள் என்பது இக்கருவிகளின் மூலம் அறியமுடிகின்றது.

## நுண்கற்காலம்

நுண்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான நடையங்கள் ஏதும் இதுகாறும் இப்பகுதியில் கிடைக்கவில்லை.

## புதியகற்காலம்

புதியகற்காலம் தொல்பழங்கால வரலாற்றில் ஒரு புரட்சிகரமான காலம் என்று கொள்ளலாம். காடுகளில் விலங்குகளைப் போன்று திரிந்த மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழவும் ஆடுமாடு களை வளர்க்கவும் முற்பட்டனர். வேட்டையையே தொழிலாகக் கொண்ட நிலையிலிருந்து முன்னேறி வேளாண்மைச் செய்யவும் ஈடுபட்டனர். பையம்பள்ளி அகழாய்வின்போது வெளிக்கொணரப் பட்ட தொல்பொருட்கள், இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

பழையகற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளைக் காட்டிலும், புதியகற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள் வழுவழுப்பாகவும், கூர்மையான முனைகளைக் கொண்டதாகவும் உள்ளன. இக்கருவிகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கைக்கோடரி கள் (செல்ட்) என்று கூறுகின்றனர். முல்லை நிலப் பகுதியில் புதியகற்கால மக்கள் வாழ்ந்ததற்கானத் தடையங்கள் தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்காணும் இடங்களில் கிடைக்கின்றன.

1 தொகரப்பள்ளி
2 பன்னிமடுவு
3 கப்பல்வாடி
4 பரிகம்
5 பழையகுளம்
6 பாலக்கோடு
7 கொல்லப்பள்ளி
8 முல்லைக்காடு
9 பருகூர்
10 மோதூர்
11 பாலவாடி
12 மாட்லாம்பட்டி.

கப்பல்வாடி, பருகூர் ஆகிய பகுதிகளில் புதியகற்காலக் கருவிகள் தயாரிக்கும் தொழில்பட்டறைகள் இருந்துள்ளன. இன்றும் இவற்றின் எச்சங்களைக் காணமுடிகின்றது. கைக்கோடரி, கல்சுத்தி போன்ற கற்கருவிகள், தருமபுரி மாவட்டத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன. கைக்கோடரி என்னும் கற்கருவி நன்கு தேய்க்கப்பட்டு ஒரு முனைக் கூம்பு வடிவிலும் மறு முனை உளி போன்ற அமைப்பிலும் காணப்

படுகின்றது. இக்கைக்கோடரிகளை மரப் பட்டைகளை உரிக்கவும், விலங்குகளின் தோலைக் கிழிக்கவும் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

மட்பாண்டங்கள் செய்யவும் இவர்கள் அறிந்திருந்தனர். கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்களின் ஓடுகள் இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளைக் கொண்டு புதியகற்கால மக்கள் சிறுசிறு வீடுகள் கட்டி வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. புதியகற்கால மக்கள் தமிழகத்தில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளனர். தருமபுரி மாவட்டப் பகுதியிலும் இக்காலத்தில் அவர்கள் வாழ்ந்திருக்கக்கூடும்.

## பெருங்கற்காலம்

புதியகற்காலத்தைத் தொடர்ந்து வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். இறந்தவர்களைப் புதைக்கும்பொழுது பெரிய பெரிய கற்களைப் பயன்படுத்தினர். இவ்வாறு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை உருவாக்கியதால், இக்காலம் பெருங்கற்காலம் என்று கூறப்படுகிறது. இரும்பின் உபயோகத்தை அறிந்திருந்ததனால் இக்காலத்தை 'இரும்புக் காலம்' என்றும் கூறுவர். பெருங்கற்காலத்தைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கி.மு. 800-க்கும் கி.பி. 300-க்கும் இடைப்பட்டக் காலம் என்று கணித்துள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் கல்திட்டை, கல்பதுக்கை, கல்வட்டம், குத்துக்கல், தாழி, பேழை போன்ற வகைகளைச் சேர்ந்த ஈமச்சின்னங்கள் கிடைக்கின்றன.

## கல்திட்டை

கல்திட்டை என்பது பூமியின் மேற்பரப்பில் அமைந்த ஒரு ஈமச்சின்னமாகும். நான்கு கற்பலகைகளைக் கொண்டு, அறை போன்று அமைத்து அதன் மேல் ஒரு பலகைக் கல்லை வைத்து முடியுள்ளனர். இந்த கற்பலகைகள் அளவற்ற, ஒழுங்கற்ற வடிவமுடையவை. காண்பதற்கு இயற்கையாகக் கிடைக்கும் கற்பாறைகளைப் போன்று உள்ளன. கிழக்குப் பக்கக் கற்பலகையில் வட்ட

வடிவமான துவாரம் ஒன்று காணப்படுகிறது. இதை இடுதுளை என்பர்.

மல்லசமுத்திரத்திற்கு அருகிலுள்ள மலையின் மேல் பகுதியில் நூற்றுக்கணக்கான கல்திட்டைகள் உள்ளன. இப்பகுதி மக்கள் இதனைப் "பாண்டவர் வீடு" என்று கூறுகின்றனர். இங்குள்ள சில சின்னங்களைச் சுற்றி சுவர் போன்ற அமைப்பு ஒன்று கருங்கற்களால் வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இதனைச் சுற்றி உயர்ந்த அரை வட்டவடிவிலுள்ள கற்பாறைகளும் சதுரமான அமைப்புடைய கற்பாறைகளும் இணைக்கப்பட்டு சுவர் போன்று எழுப்பப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இதைப் போன்ற அமைப்பு உடைய ஈமச்சின்னங்கள் ஆந்திர மாநிலத்தில் காணப் படுகின்றன. இத்தகைய கல்திட்டைகள் சென்னசத்திரம், பீமாண் டப்பள்ளி, கங்கலேரி போன்ற இடங்களில் உள்ளன.

## கல்வட்டம்

தருமபுரி மாவட்டத்தில் கல்வட்டங்கள் என்று கூறுகின்ற பெருங் கற்காலச் சின்னங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. முதலில் பூமியைச் சதுரமாகவோ செவ்வகமாகவோ தோண்டி அறை போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய நான்கு பக்கங் களிலும் பலகைக் கற்களை நிறுத்தி அடிப்பகுதியையும், மேல் பகுதியையும் வேறு இரண்டு கற்பலகைகளைக் கொண்டு மூடப்பட்ட தால், இது பார்ப்பதற்கு ஒரு பெட்டி போன்ற அமைப்பில் தோற்றமளிக்கிறது. கிழக்குப் பகுதியிலுள்ள பலகைக் கல்லில் இடுதுளை ஒன்றும் காணப்படும். இறந்தவர்களை இதனுள் வைத்து பின்னர் முழுமையாக மண்ணால் மூடி, கூழாங்கற்களை அதன் மேல் குவித்து தரைப் பகுதியைக் காட்டிலும் சற்று உயரமான மேடு போன்ற அமைப்பில் உருவாக்கிய பின் மேடான இப்புதைக் குழியைச் சுற்றிலும் பெரிய பெரிய கல் உருண்டைகள் வட்ட வடிவில் வைக்கப்பட்டிருக்கின்றன. இத் தகைய ஈமச்சின்னம் கல்வட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

கல்வட்டங்கள் இன்றி காணப்படும் இத்தகைய ஈமச்சின்னங் களைக் கல்பதுக்கை என்று கூறுவர். பெட்டமுகலாலம், தொகரப் பள்ளி, கோடிநத்தம், மொரப்பூர், பண்ணியள்ளி புதூர், பஸ்தரப்

பள்ளி, மூங்கில் மடுவு, இண்டூர், பனையகுளம், திப்பம்பட்டி போன்ற இடங்களில் கல்வட்டங்களும், கல்பதுக்கைகளும் காணக் கிடைக்கின்றன.

## குத்துக்கல்

ஓர் ஒழுங்கற்ற, உயரமான கருங்கல்லை செங்குத்தாக புதை குழிகளின் மேல் நிறுத்தி உள்ளனர். இதையே 'குத்துக்கல்' என்று கூறுகின்றனர். இத்தகையக் குத்துக்கல் சின்னம் பாலக்கோடு வட்டம் திருமல்வாடி என்ற ஊருக்கு அருகில் முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்டது. இப்பகுதி மக்கள் இதனை ஆனைக் கட்டும் கல் என்று அழைக்கின்றனர். இந்த குத்துக்கல் 11 அடி உயரமும் 31.5 அடி அகலமும் உடையது.

## தாழி

பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் தாழியும் ஒரு வகையாகும். இறந்தவர்களை வைத்துப் புதைக்கும் தாழி, அகன்ற வாய் பாகமும் கூம்பு போன்ற அடிப்பாகமும் கொண்டது. தாழி மண்ணால் செய்து சுடப்பட்டுள்ளது. மோதூர், ஆகனூர், கோட்டூர் போன்ற இடங்களில் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## பேழை

பேழை என்ற ஈமச்சின்னம் மற்றொரு வகையாகும். மண்ணால் பெட்டி போன்ற அமைப்பில் செய்து நன்கு சுடப்பட்டிருக்கும். இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. மேல்பகுதியாகிய மூடி விலங்கு களின் உருவங்களை வெளிக்காட்டுவது போன்று அமைந்துள்ளது. ஆடு, குதிரை போன்ற உருவங்களின் அமைப்பில் இவைகள் செய்யப் பட்டுள்ளன. பேழையின் அடிப்பகுதியில் கால்களும் காணப் படுகின்றன. இந்த கால்களின் எண்ணிக்கைகள் குறைந்தது எட்டு முதல் இருபத்திநான்கு வரை கிடைத்துள்ளன. இத்தகைய பேழைகள் தருமபுரி மாவட்டத்தில் தொகரப்பள்ளி, கொங்கன்பாளையம், குருவிராயனப்பள்ளி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

### மட்பாண்டங்கள்

பெருங்கற்கால பண்பாட்டினர் மட்பாண்டங்கள் செய்வதில் கைத்தேர்ந்திருந்தனர். தருமபுரிப் பகுதியில் கீழ்கண்ட வகையைச் சார்ந்த மட்பாண்டங்கள் கிடைக்கின்றன.

1 கருப்பு சிவப்பு மட்கலங்கள்
2 சிவப்பு மட்கலங்கள்
3 கருப்பு மட்கலங்கள்
4 பழுப்பு நிறச் சாயம் பூசப்பட்ட மட்கலங்கள்

கிண்ணம், பானை, குடுவை, குவளை, சாடி, மூடி, தாங்கி போன்ற மட்பாண்டங்கள் பல அளவுகளில் கிடைத்துள்ளன. இவற்றில் குறியீடுகளும் காணப்படுகின்றன.

### இரும்புப் பொருட்கள்

ஈமச்சின்னங்களில் பலவகையான மட்கலங்களுடன் இரும்புப் பொருட்களும், விலை உயர்ந்த கல்மணிகளும் கிடைத்துள்ளன. கோடாரி, வாள், குறுவாள் போன்றவை தருமபுரி மாவட்டத்திலுள்ள ஜீனூரில் கிடைத்துள்ளன.

### ஓவியங்கள்

தருமபுரி மாவட்டத்திலுள்ள மல்லப்பாடி மலையில் முதன் முதலில் பெருங்கற்கால ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியம் வெண்மையான நிறத்தில் தீட்டப்பட்டுள்ளது. இரண்டு வீரர்கள் இரண்டு குதிரைகளின் மேல் அமர்ந்து ஈட்டி எறிவது போன்ற அமைப்பில் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது. தருமபுரிப் பகுதியில் கிடைக்கின்ற இத்தகைய ஓவியங்கள் அனைத்தும் வெண்மை நிறத்திலேயே காணப்படுகின்றன. மல்லசமுத்திரத்திலுள்ள கல் திட்டைகளின் உட்பகுதிகளில் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே இந்த ஓவியங்கள் பெருங்கற்காலத்தைச் சார்ந்தவைகள் என்று கூறலாம்.. மல்லப்பாடியில் கிடைத்த குகை ஓவியமே தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டக் குகை ஓவியங்களில் மிகவும் பழமையானதாகும்.

# சங்ககாலம்

## அதியமான் நெடுமான் அஞ்சி

சங்க இலக்கியங்கள் கூறும் அதியமான் நெடுமான் அஞ்சி தகடூர்ப் பகுதியை ஆட்சி செய்தான். இவனுடைய புகழைப் பாராட்டி ஔவையார் பல பாடல்கள் பாடியுள்ளார். அதியமான் மரபினரைப் பற்றிய மிகப் பழமையான குறிப்பு வடஇந்தியாவில் கிடைக்கிறது. அசோக மன்னனின் கல்வெட்டு, 'சத்யபுத்ரர்' என்று அதியமானைக் கூறுகின்றது. எனவே அசோகனின் சமகாலத்தவராக அதியமான்கள் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. 'சத்யபுத்ர' என்ற பதம் அதியமானைக் குறிப்பது என்பதற்கு மேலும் ஒரு கல்வெட்டு தென்னார்க்காடு மாவட்டம் ஜம்பையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் வாசகம் :

"சதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி" என்பதாகும்.

இதிலிருந்து சத்தியபுத்திரர் என்பது அதியமான்களையே குறிப்பது என்பது தெளிவாகிறது. சமணமுனிவருக்கு அதியமான் தானமாகக் கொடுத்த படுக்கையைப் பற்றி இக்கல்வெட்டுக் கூறுகிறது. இதனால் அதியமானின் ஆட்சிப் பரப்பு திருக்கோவிலூர் வரை பரவி இருந்தது என்பதை உணரமுடிகிறது. மலையமான் திருமுடிக்காரியை, திருக்கோவிலூருக்கு அருகில் அதியமான் நெடுமான் அஞ்சி வென்றதைப் பற்றிக் கூறுகின்ற சங்க இலக்கியப் பாடல் செய்தி, இக்கல்வெட்டால் உறுதிப்படுகிறது. அதியமான் ஏழு சிற்றரசர்களை வென்று தன்னுடைய ஆட்சியைப் பரப்பினான் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நீண்ட ஆயுளைத் தருகின்ற நெல்லிக்கனியை, தான் உண்ணாமல் தமிழ்ப் பற்றுக் காரணமாக ஔவைக்கு அக்கனியைக் கொடுத்து ஔவையையும் தமிழையும் வாழவைத்த வள்ளல் அதியமான். இவனுடைய காலத்தில்தான் முதன்முதலில் கரும்பு

பயிர் செய்வது கண்டுபிடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினி என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. அதியமான் போர்க்களத்தில் இருந்த போது இவன் பிறந்தான் என்பதும் தெரியவருகின்றது.

## தகடூர்

சங்க இலக்கியங்களில் தகடூர் என்று அழைக்கப்படுகின்ற பகுதி தற்போதைய தருமபுரி மாவட்டமாகும். தகடூருக்குத் தகடை, தகட்டூர், தகடாபுரி என்று பல பெயர்கள் காணப்படுகின்றன. 'தகடு' எனும் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. தகட்டு வடிவப் பொருள், பொன், பூவின் புறவிதழ் போன்றவை சங்க இலக்கியங்கள் மூலம் பெறப்படும் பொருள்களாகும். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த இருளப்பட்டிக் கல்வெட்டு, தகடூரைப் பற்றிக் குறிக்கும் முதல் கல்வெட்டாகும். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தகடூர் நாட்டைப் பற்றியக் குறிப்புக்கள் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. மூன்றாம் இராசராசனின் காலத்தில் விடுகாதழகிய நல்லூர் என்றும்; போசள, விஜயநகர மன்னர்களின் காலத்தில் "கடைக்கோட்டூரான நானாதேசிப் பட்டணம்" என்றும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தருமநல்லூர், தருமபுரி என்று பெயர் மாற்றம் அடைந்துள்ளது.

## தகடூர் யாத்திரை

அதியமானைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் மற்றொரு நூல் 'தகடூர் யாத்திரை' ஆகும். இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. இதுவரையிலும் கிடைத்துள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 48 ஆகும். இவற்றுள் 44 பாடல்கள் புறத்திரட்டு என்ற நூலில் உள்ளன. மூன்று பாடல்கள் நச்சினார்க்கினியரின் மேற்கோள் பாடல்களாலும், ஒன்று தக்கயாகப் பரணி உரையின் மேற்கோளாகவும் கிடைத்துள்ளன. வரலாற்று நிகழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட 'தகடூர் யாத்திரை' உரையும் பாடலும் இணைந்த ஒன்றாகும்.

சேரமன்னன் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் அதியமானுக்கும் இடையே நடைபெற்ற போரைப் பற்றிக் கூறுகின்ற நூல் தகடூர் யாத்திரை. சேரமன்னன் தகடூரை முற்றுகையிட்டு வென்று தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டதால் இம்மன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற பெயரைப் பெற்றான். இப் போரில் அதியமானின் மகன் பொகுட்டெழினி உயிர் நீத்தான்.

''ஒளிவிடு பசும்பொன் ஓடை சூட்டிய
வெளிறில் வெண்கோட்ட களிறுகெழு வேந்தே
வினவுதியாயிற் கேண்மதி சினவாது
ஒருகுடர்ப் படுதர ஓரிரை துற்றும்
இருதலைப்புள்ளின் ஓருயிர் போல
அழிதரு வெகுளி தாங்காய்''

என்ற பாடல் ஒருவயிற்றுப் பிறந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட போரை விளக்குகின்றது. தகடூர் யாத்திரையின் பழைய பெயர் 'தகடூர் மாலை' என்பது என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. தகடூர் மாலை தகடூர் யாத்திரையாக மாறியது எப்பொழுது என்பது கேள்விக் குறியாக உள்ளது.

# வரலாற்றுக் காலம்

**நடுகல்**

தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவில் நடுகற்கள் கிடைக்கின்றன. இந்த நடுகற்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. கல்வெட்டுக்களுடன் கூடிய நடுகற்கள் 2. கல்வெட்டுக்கள் இல்லாத நடுகற்கள். கல்வெட்டுக்கள் இல்லாத நடுகற்களே அதிகம். நடுகல் என்பது வீரமரணம் எய்திய வீரனுக்கு எடுக்கப்படும் கல். இவற்றில் வீரனின் உருவம் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. இவற்றுடன் சில பொருட்களைப் புனிதமாகக் கருதி வடித்துள்ளனர். வீரனின் உருவம் பெரும்பாலும் வடக்கு நோக்கி இருக்கும். வீரனின் கைகளில் கத்தி, கேடயம், வில், அம்பு, குறுவாள், ஈட்டி போன்ற ஆயுதங்கள் காட்டப்பட்டிருக்கும். இவனைச் சுற்றிலும் கெண்டி, மணி, முக்காலி, ஏர்க்கலப்பை, பாதம், பறவை, வெண் சாமரம் போன்றவைகளும் வடிக்கப்பட்டிருக்கும்.

இங்கு கிடைக்கும் நடுகற்களில் புலியைக் குத்துவது போன்ற நடுகற்களே அதிகம். இப்பகுதி காடுகளும், மலைகளும் சூழ்ந்து காணப்படுவதால் வனவிலங்குகள் அதிகமாக இருந்துள்ளன. புலியுடன் வீரத்தோடு போரிட்டு இறந்தவர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லை "புலிக்குத்திபட்டான் கல்" என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தருமபுரி பகுதியில் அமைந்துள்ள பல ஊர்ப் பெயர்கள் புலியைத் தொடர்புபடுத்தி வருகின்றன. உதாரணமாக-புலிக்கரை, புலியூர், புலியம்பட்டி போன்ற ஊர்களைக் கூறலாம்.

காட்டுப்பன்றி, பாம்பு போன்ற விலங்குகளுடன் போரிட்டு மாண்ட வீரர்களின் நடுகற்களும் உள்ளன. பன்றியுடன் போரிட்டு உயிர் நீத்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் "பன்றி குத்திப்பட்டான் கல்" என்று கல்வெட்டு கூறுகிறது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து தருமபுரிப் பகுதியில் சிறுசிறு நாடுகள் தன்னிச்சையாகச் செயல்பட்டு வந்துள்ளன. இத்தகைய

நாடுகளை ஆண்ட குறுநில மன்னர்கள் ஒருவர் மீது மற்றொருவர் படையெடுத்துச் சென்று கால்நடைகளைக் கவர்ந்து வந்துள்ளனர். மாற்றரசர்களின் தொறுவைக் கவர்ந்து வருவதை வெட்சித் திணை என்றும், தொறு மீட்டலைக் கரந்தை என்றும் இலக்கியங்கள் கூறு கின்றன. இத்தகைய நடுகற்கள் பெரும்பாலானவை கல்வெட்டுக் களுடன் காணப்படுகின்றன.

தருமபுரி பகுதியிலும் அதனை அடுத்த செங்கம் பகுதியிலும் கிடைக்கின்ற நடுகற்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. பாப்பம்பாடி, பனையகுளம், கொளகத்தூர் நடுகற்களில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் சிற்பக்கலை வரலாற்றில் குறிப்பிடத் தக்கவை. இந்த நடுகற்கள் பல்லவ மன்னர் களின் ஆட்சியின் கீழ் இருந்த குறுநில மன்னர்களின் நடுகற்களாகும்.

அரூர் வட்டத்திலுள்ள சிந்தல்பாடி நடுகல்லில் காணப்படும் கல்வெட்டு, எதிரிகளால் ஊரழிவு ஏற்பட்டபோது காமுண்டன் அளப்பமாறன் கண்ணையன் என்பவன் போரிட்டு உயிர் நீத்ததை எடுத்துரைக்கின்றது. இதில் வீரனின் உருவம் குறுவாள், வில் ஆகியவற்றுடன் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் மேல்பகுதியில் மேலுலகம் சித்தரிக்கப்பட்டுள்ளது. இக்காட்சி வீரமரணம் எய்தியவர்கள் மேலுலகத்துக்குச் செல்கின்றனர் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

கிருட்டிணகிரி வட்டம் சந்தூரில் கிடைக்கும் நடுகற்களில் காணப்படும் உருவங்களின் அமைப்பு முறை மற்றவைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்நடுகற்களில் உள்ள கல்வெட்டுக்கள் "ஸ்ரீகட்டானைப் பருமா" காலத்தைச் சேர்ந்தவை. பாண, நுளம்ப, போசள மற்றும் சோழர்களின் கல்வெட்டுக்களுடனும் நடுகற்கள் கிடைத்துள்ளன. விசயநகர மன்னர்களின் காலத்திய நடுகற்கள் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. பல நடுகற்களில் வீரனுடன் பெண்களையும் காட்டுவது வழக்கமாக உள்ளது. இத்தகைய பெண்கள் கையில் பை போன்ற பொருள் காணப்படுகின்றது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் ஒன்றில் துப்பாக்கியுடன் காணப் படும் வீரனின் உருவம் உள்ளது.

### பல்லவர்கள்

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுடைய ஆட்சிப் பரப்பு தொண்டை நாட்டுப் பகுதி மட்டுமின்றி தகடூர்ப் பகுதியிலும் பரவி இருந்தது என்பதை இங்கு கிடைக்கின்ற நடுகல் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன. இவர்களுடைய கல்வெட்டுக்கள் ''கோவிசைய'' என்று தொடங்குகின்றன. விண்ண பருமர், சிங்கவிண்ணன், மகேந்திரவர்மன், ஈசுவரவர்மன் ஆகிய பல்லவ மன்னர்களின் கல்வெட்டுக்கள் இங்கு காணப்படுகின்றன.

### கங்கர்கள்

தகடூர் நாடு கங்கர்களால் கைப்பற்றப்பட்டு இவர்களது ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. இவர்களுடைய காலத்தில் தகடூர்ப் பகுதி, கங்கநாடு என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் கங்க அரசர்களான ஸ்ரீபுருஷன், சிவமாறன் போன்றவர்களின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. கட்டானைப்பருமர் கல்வெட்டுக்கள் சந்தூர் பகுதியிலும் மற்ற பகுதிகளிலும் கிடைக்கின்றன. இந்த கட்டானைப் பருமர் என்பவர்களும் கங்க வமிசத்தைச் சார்ந்தவர்களே என்று கருதப்படுகின்றது.

இவர்களுடைய நடுகல் கல்வெட்டுக்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். கங்க மன்னர்களின் கீழ் ஆட்சி செய்த அரிமிறை மாவலி வாணராயர், மாவலி வாணராயர் போன்ற பாண அரசர்களின் கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன.

### நுளம்பர்கள்

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தகடூர்ப் பகுதியை நுளம்ப அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள், கட்டடக்கலைக்கு இப்பகுதியில் பெருந்தொண்டாற்றியுள்ளனர். தருமபுரியில் அமைந்துள்ள கோட்டைக் கோயில் என்றழைக்கப்படும் மல்லிகார்ஜுனர் கோயில் இவர்கள் காலத்தில் எடுக்கப்பட்டது. நுளம்பர்களின் கட்டடக் கலையின் சிறப்பை இங்கு அமைந்துள்ள தூண்கள், விதானம், வாயிற் பகுதி போன்றவற்றின் நுணுக்கமான வேலைப்பாடுகள் பறைசாற்றுகின்றன. இப்பகுதியை வீரநுளம்பன், நுளம்ப வீரசோழன், வியலேச்சுரன், ஐயப்பதேவன் போன்ற நுளம்ப மன்னர்கள் ஆண்டுள்ளனர்.

## சோழர்கள்

முதலாம் இராசராசனின் காலத்தில் சோழர்களின் ஆட்சிப் பரப்பு விரிவுபடுத்தப்பட்டது. இவன் தகடூர்ப் பகுதியைக் கைப்பற்றி 'நிகரிலி சோழ மண்டலம்' என்று பெயரிட்டான். முதலாம் இராசேந்திரனின் காலத்தில் இது "நுளம்பபாடியான நிகரிலி சோழ மண்டலம்" என்று பெயர் மாற்றம் அடைந்துள்ளது. சோழர் காலக் கல்வெட்டுக்கள் தகடூர்ப் பகுதியைக் குறிக்கும்போது "நிகரிலி சோழ மண்டலத்து கங்க நாட்டுத் தகடூர் நாடு" என்று கூறுகின்றன.

அரூர் வட்டத்திலுள்ள தீர்த்தமலைக் கோயிலுக்கு மண்டபம் எடுத்தது பற்றியும், நுந்தாவிளக்கிற்கு கொடுத்த தானம் பற்றியும் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. சோழர் காலத்தில் இங்கு சேத்திரபாலருக்கும், சண்டேச்சுர நாயனாருக்கும் எடுத்த பரிவார ஆலயங்களைப் பற்றியும், உத்தமச் சோழப் புறமலை நாடாழ்வான் செய்த தானம் பற்றியும் கல்வெட்டுக் களால் அறிய முடிகின்றன.

முதலாம் குலோத்துங்கனின் காலத்திற்கு முன்பே சின்னக் கொத்தூரில் கோயில் இருந்ததைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சோழப் பல்லவரையன் கொடுத்த முதலிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு இக்கோயிலில் நிவந்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையும் இங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தியக் கல்வெட்டுக்களில் 'நிகரிலி சோழ மண்டலத்து கங்க நாட்டுத் தகடூர் நாட்டு புறமலை நாடு' என்று கூறப்பட்டுள்ளது. புறமலை நாட்டுப் பகுதியையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் கூறும்போது கங்கநாடும், தகடூர் நாடும் இணைந்தே வருகின்றன. இக்காலத்தில் தகடூர் நாடும், கங்க நாடும் ஒன்று என்பது தெளிவாகின்றது.

சோழர்கள் இங்குள்ள கோயில்களுக்குப் பலவகையான தானங் கள் செய்துள்ளனர். தருமபுரி கோட்டைக் கோயிலுக்கு திருப்பருத் திட்டையும் திருப்புதுக்குச் சாந்தும் செய்வித்ததை இங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. முதலாம் இராசராசனின் காலத்திலிருந்து பல சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் தருமபுரிப் பகுதியில் கிடைத்துள்ளன.

### பிற்கால அதியர்கள்

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களைப்போல் அதியமான் வமிசத்தினரும் இணையாக இப்பகுதியை ஆட்சி புரிந்தனர். சோழ நாடு, பாண்டிய நாடு போன்று தகடூர் நாடும் ஒரு தனி நாடாகவே திகழ்ந்துள்ளது. மாற்றரசர்களின் கையில் பல காலம் இருந்த போதும் தகடூர் நாடு தனி நாடாக சிறப்புடன் இருந்ததை கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

சங்க கால அதியர்களின் பரம்பரையினர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலும் தகடூர்ப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். சோழர்களின் ஆதிக்கம் மேலோங்கிய காலத்தில் அவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக இவர்கள் இருந்துள்ளனர். இவர்களில் மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் வாழ்ந்த "இராசராச அதிகன் விலங்காமொழி விடுகாதழகிய பெருமாள்" என்பவன் குறிப்பிடத் தக்கவனாவான். இவனுடைய கல்வெட்டுக்கள் கம்பைநல்லூரில் உள்ளன. அங்கு இவன் எடுத்த கோயில் பற்றிய செய்தியையும், அவன் நாடு எதுவரை பரவி இருந்தது என்பதையும் குறிக்கும் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அழகாக வடிக்கப்பட்ட பாடல் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

> "பெண்ணைக் கரை மருவுஞ் சிறு கோட்டை
> குளன் நாகை நாய கற்றளித்துக் கற்றளி தன்
> போரிட்ட காரணையகையான் திரைமருவுந்
> தடங்கமலத் தகடை மண் டின் செழும் பாலி
> பெண்ணை பொன்னித் திருநதி மூன்றுடைய
> விரை மருவுந் தார்மார்வன் ராஜராஜவதிகன்
> விலங்காமொழி விடுகாதழகிய பெருமாளேய்".

அவனுடைய நாடு பாலாறு, பொன்னியாறு, பெண்ணையாறு ஆகிய மூன்று ஆறுகளை உடையது என்று புகழப்பட்டுள்ளது. இம் மன்னனின் காலத்தில் அரூர் 'விடுகாதழகிய நல்லூர்' என்று வழங்கப்பட்டிருந்த செய்தியைக் கல்வெட்டிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. அரூரின் பழைய பெயராகிய அரியூர் என்பதையும்

இணைத்து விடுகாதழகிய நல்லூரான அரியூர் என்று கூறப்பட்டுள்ளது. எனவே சோழர்களின் ஆதிக்கத்தின் போதும் அதியமான் பரம்பரையினர் சிறப்புற்றிருந்தனர் என்பது தெளிவு.

## அதியமான் பெருவழி

தற்போதுள்ள நெடுஞ்சாலைகள் போன்று கி.பி 13-ஆம் நூற்றாண்டில் இருந்த நெடுஞ்சாலைகளைப் பெருவழிகள் என்று அழைத்துள்ளனர். தருமபுரிக்கு அருகில் இரண்டு பெருவழிகளைக் குறிக்கும் கற்பலகைகள் கிடைத்துள்ளன. "அதியமான் பெருவழி நாவற் தாவளத்திற்கு காதம் 27" என்று பொறிக்கப்பட்டு, 20 என்று எண்ணைக் குறிக்க இரண்டு பெரிய வட்டங்களும் 7-ஐ குறிக்க ஏழு சிறிய வட்டங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இது ஒரு மைல் கல்லாகும். படிக்காத பாமரரும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் இந்த மைல் கல் அமைக்கப்பட்டிருக்கிறது.

மற்றொன்று 29 மைல் தூரத்தைக் குறிக்கும் மைல் கல் ஆகும். இருபதைக் குறிக்க இரண்டு பெரிய வட்டங்களும், 9-ஐ குறிக்க ஒன்பது சிறிய வட்டங்களும் இடப்பட்டுள்ளன. அதியமான் பெயரில் இந்த பெருவழிகள் அமைந்துள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

## போசளர்கள்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் போசள மன்னனான வீர ராமநாதன் குந்தாணியைத் தலைநகராகக் கொண்டு, இப்பகுதியை ஆட்சி புரிந்துள்ளான். குந்தாணி போசள மன்னர்களின் கீழ் ஒரு தனிப்பட்ட அரசாகத் திகழ்ந்தது. குந்திஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டு கைலாசநாதமுடைய நாயனார்க்குச் செய்த தானத்தைப் பற்றிக் கூறுகிறது. இக்கோயிலுக்குத் தேவசமுத்திரம் என்ற ஏரியின் கீழ் உள்ள நிலத்தைத் தானமாகக் கொடுத்ததைப் பற்றி அறிய முடிகின்றது. மேலும் போசள மன்னன் இராமநாதனின் மகன் விசுவநாதன் என்ற குறிப்பையும் கி.பி. 1288-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு கூறுகின்றது.

மோதூர், அதியமான்கோட்டை, கம்பைநல்லூர், ஓசூர், கொத்தூர் போன்ற இடங்களில் போசளர்கள் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

## விசய நகரப் பேரரசு

போசள மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர், விசய நகரப் பேரரசினர் தகடூர்ப் பகுதியைத் தங்கள் வசமாக்கி ஆட்சி புரிந்தனர். இவர்களுடைய காலத்தில் கட்டடக் கலை, விவசாயம், பிற தொழில்கள் விரிவடைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

தகடூர் ராஜராஜேஸ்வரமுடையநாயனார் கோயில் திருப்பணி செய்வதற்காக நிலதானம் வழங்கியதை இங்குள்ள கல்வெட்டு கூறுகிறது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ள பல கோயில்கள் விசய நகர மன்னர்களின் கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. மல்லப்பாடி, சின்னக்கொத்தூர், தென் கரைக் கோட்டை போன்றவைகள் குறிப்பிடத்தக்கவை.

சின்னக்கொத்தூரில் உள்ள கல்வெட்டு திருவேகம்பமுடைய நாயனார்க்கு திருவமுது செய்யவும், திருமாலை சாத்தவும் புதுப்பற்றில் உள்ள காக்கும் நாயகநல்லூரைத் தேவதானமாகக் கொடுத்ததைக் கூறுகிறது. இத்தேவதான ஊரிலிருந்து வருகின்ற பயிறு, காணம், வீச்சுப்பாட்டம், அம்சைச் சாரிகை, குதிரைச் சாரிகை, கல்யாணதாயம் போன்ற வரிகள் இறையிலியாக வழங்கப்பட்டுள்ளன.

விசயநகர மன்னர்கள் காலத்தில் பல புதிய நாடுகளும், ஊர் களும் ஏற்படுத்தப்பட்டன. இவர்கள் வைணவ ஆலயங்களை அதிக அளவில் கட்டியுள்ளனர்.

விசயநகரப் பேரரசின் இறுதிக் காலத்தில் செகதேவிராயன் என்பவன் தகடூர்ப் பகுதியை ஆண்ட சிறந்த குறுநில மன்னன் ஆவான். இவன் பெனுகொண்டா பகுதியைச் சார்ந்தவன். பீஜப்பூர் சுல்தானின் படையெடுப்புக் காரணமாக, பெனுகொண்டாவை விட்டு செகதேவிக்கு தன்னைச் சார்ந்த மக்களுடன் குடிபெயர்ந்தான். சந்தரகிரியை ஆண்ட விசயநகர மன்னனின் ஆதரவு செகதேவி ராயருக்கு இருந்தது. இவன் முதலாம் வெங்கட்டாவின் மகளைத் தன் மகன் இரண்டாம் செகதேவிராயனுக்கு மணமுடித்தான். பின்னர் இரண்டாம் செகதேவிராயன் செகதேவியில் இருந்த தன்னுடைய தலைநகரை இராயகோட்டைக்கு மாற்றினான்.

## நாயக்கர்

கி.பி. 1659-இல் தருமபுரிப் பகுதியில் மதுரை நாயக்கர்களின் ஆதிக்கம் சற்றுக் குறைந்தும், மைசூர் ராயர்களின் கையோங்கியும் இருந்துள்ளது. 1659-லிருந்து 1672 வரை தொட்டதேவராயரும், 1672-லிருந்து 1704 வரை சிக்கதேவராயரும் ஆட்சி புரிந்துள்ளனர். தொட்டதேவராயர் காலத்தில் திருமலை நாயக்க மன்னனின் வாரிசான சொக்கநாத நாயக்கன் 1667-இல் மதுரையில் இருந்து மைசூர் பகுதியின் மீது படையெடுத்தான். இவனுக்குத் துணையாகச் செஞ்சியை ஆண்ட நாயக்கரும், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் வெங்கோஜியும் படையெடுத்தனர். இந்தப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. தொட்டதேவராயர் ஈரோடு, நாராபுரம் ஆகிய ஊர்களை நாயக்க மன்னரிடமிருந்தும், ஓமலூரைக் கட்டி முதலிகளிடமிருந்தும் இந்தப் போரின் விளைவாகத் தன் ஆட்சியுடன் இணைத்துக்கொண்டார்.

## நாட்டுப் பிரிவுகள்

தகடூர் நாடு ஒரு தனி நாடாகத் திகழ்ந்துள்ளது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தகடூர் நாடு, புறமலை நாடு, கோவூர் நாடு, மீவேணாடு, மீகொன்றை நாடு ஆகியவை இருந்துள்ளன.

சோழர்களின் காலத்தில் தகடூர்ப் பகுதி நிகரிலிசோழ மண்டலம் என்றும், அதன் உட்பகுதிகள் நாடுகளாகவும், நாடுகள் பற்றுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

புறமலை நாடு
கோவூர் நாடு
மேல் கொன்றை நாடு
மீவேணாடு
கங்க நாடு
கோயினூர் நாடு
வேளாள நாடு
தாயனூர் நாடு
வேள்களி நாடு
எயில் நாடு

மன்ன நாடு
விரவி நாடு
முரசு நாடு

ஆகிய நாடுகளின் பெயர்கள் காணப்படுகின்றன.

புளியாழ்வார் பற்று
ஆரப்பூர் பற்று
தாமலூர் பற்று
மூக்கனூர் பற்று
புதுப்பற்று
அங்கணப் பற்று

போன்ற பற்றுக்களின் பெயர்கள் தகடூர்ப் பகுதியில் கிடைக்கின்றன.

## சுடுமண் பொம்மைகள்

பண்டைக் காலத்தில் வழிபாட்டுக்கெனச் சுடுமண் பொம்மைகள் செய்வது வழக்கமாக இருந்துள்ளது. இத்தகைய சுடுமண் பொம்மைகள் மாட்டலாம்பட்டி, பனையகுளம், சாமனப்பள்ளம், வெங்கட சமுத்திரம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இந்தப் பொம்மைகளில் பெரும்பாலானவை சமண சமயத்தைச் சார்ந்த இயக்கி, இயக்கன் உருவங்களாகும். சாமனப் பள்ளத்தில் கிடைத்த இவ்வுருவம் நன்கு சுடப்பட்டுள்ளது. இரண்டு கைகளுடன் காணப்படும் இயக்கியம் மனின் ஆடை, ஆபரணங்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

வெங்கடசமுத்திரத்தில் கிடைத்துள்ள சுடுமண் உருவம் ஒரு தாய்த் தெய்வமாகும். இரண்டு கைகளில் தன் குழந்தையை ஏந்திப் பாலூட்டும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. தலை அலங்காரம் "தமிழம்" என்ற அமைப்பை ஒத்துக் காணப்படுகிறது. இச் சுடுமண் பொம்மை கையால் வனைந்தது போன்றுள்ளது. ஆடைகளும், அணிகலன்களும் தட்டையாகவும், முக அமைப்புகள் கோடுகளாலும் காட்டப்பட்டுள்ளன. இவ்வுருவ அமைதியைக் கி.பி. 6—7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

### நாணயங்கள்

தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு அரசர்கள் வெளியிட்ட பலவகையான நாணயங்கள் கிடைக்கின்றன. இவற்றில் மிகவும் பழமையானவை அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் ஆகும். அரூர் வட்டத்தில் உள்ள நவலையில் இத்தகைய நாணயங்கள் சேகரிக்கப் பட்டுள்ளன. உலோகத்தகடுகளில் சில உருவங்களை அச்சுக் குத்தி வெளியிட்ட காரணத்தால் இக்காசுகள் அச்சுக் குத்தப்பட்ட காசுகள் என்று அழைக்கப்படுகின்றன.

நவலையில் கிடைத்த காசுகள் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டு களைச் சார்ந்தவை என்று கூறப்படுகின்றது. உரோமானியப் பேரரசன் டைபீரியஸ் வெளியிட்ட காசுகளும் இப்பகுதியில் கிடைக்கின்றன. இக்காசுகள் வாணிபத்தின் பொருட்டு இப்பகுதியில் வந்திருக்கக்கூடும்.

மேலும் பல்லவர், சோழர், பாண்டியர், கங்கர், விசயநகர மன்னர்களின் தங்கம், வெள்ளி, செப்புக் காசுகளும் கிடைக்கின்றன. ஆர்க்காட்டு நவாபுகளின் காசுகளும், திப்புசுல்தான் காசுகளும், உடையார் காசுகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன.

———

# பிற்காலத் தருமபுரி

## கோட்டைகள்

தருமபுரிப் பகுதியில் கோட்டைகள் அதிக அளவில் காணப் படுகின்றன. இவற்றில் அதியமான் கோட்டையே காலத்தால் முற்பட்டது. இக்கோட்டை இருந்ததற்கான தடயங்கள் இன்றும் காணப்படுகின்றன. கம்பையநல்லூர்க் கோட்டை, தருமபுரிக் கோட்டை ஆகியவை மண்ணால் கட்டப்பட்ட கோட்டைகளாகும். தற்பொழுது இடிபாடுகள் மட்டுமே உள்ளன.

விசயநகர மன்னர்கள் மற்றும் ஹைதர் அலி, திப்பு சுல்தான் காலங்களில் எழுப்பப்பட்ட கோட்டைகளுமுள்ளன. இக்கோட்டை களில் பெரும்பாலானவை மலையின் மேற்பகுதியில் அமைந்துள்ளன. தென்கரைக் கோட்டை, மத்தூர், காவேரிப்பட்டணம் போன்ற சில ஊர்களில் தரைக் கோட்டைகளை அமைத்துள்ளனர். இந்த மலைக் கோட்டைகளைக் குறிக்க, 'துருக்கம்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. உதாரணமாக மல்லப்பாடித் துருக்கம், வீரபத்திரத் துருக்கம், ஸ்ரீடே துருக்கம் போன்றவைகளைக் கூறலாம். துருக்கம் என்பது மலை அரணைக் குறிப்பதாகும். எனவே மலையின் மேல் பகுதிகளில் அமைந்துள்ள கோட்டைகளைத் துருக்கம் என்று அழைத்தனர்.

## பாராமஹால்

ஜெகதேவராயருக்கு 12 புதல்வர்கள் இருந்ததாகவும், அவர் களுக்கு 12 கோட்டைகளைக் கட்டிக் கொடுத்ததாகவும் அந்த 12 கோட்டைகள்தான் பாரா மகால் என்று கூறப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

பாரா என்றால் பன்னிரண்டு என்று பொருள். மகால் என்றால் அரசன் தங்குமிடம் என்றும் பொருள் உள்ளதால், பாராமகால் என்றால் பன்னிரண்டு கோட்டைகளைக் குறிப்பது என்று பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால் தருமபுரிப் பகுதியில் பன்னிரண்டுக்கும்

மேற்பட்ட மலைக் கோட்டைகள் உள்ளன. இவற்றில் பாராமகால் குறிப்பிடப்படும் பன்னிரண்டுக் கோட்டைகள் எவை என்பது ஆய்விற்கு உரியது.

## திப்புவும் ஹேமில்டனும்

திப்புசுல்தான் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பல கோட்டைகளை எழுப்பினான். அத்தகைய கோட்டைகளில் ஒசூர் கோட்டையும் ஒன்று ஆகும். இந்தக் கோட்டை ஆங்கிலேயக் கட்டட வல்லுநரின் உதவியுடன் பல புதிய உத்திகளைக் கையாண்டு கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோட்டையை ஆங்கிலேயக் கட்டட வல்லுநர் ஹேமில்டன் என்பவர் உருவாக்கினார்.

திப்பு தனது கோட்டையைக் கட்டத் தேர்ந்து எடுத்த இடம் இயற்கை அரண் சூழ்ந்ததாகும். கோட்டையின் தென் புறம் இராமநாயக்கன் ஏரியும், வடபுறம் சின்னாற்றின் கரையும், மேற்குப் புறம் அரசனட்டி குளமும் உள்ளன. கிழக்குப் புறம் மழைக் காலத்தில் எளிதில் கோட்டையின் உள்ளே செல்ல முடியாதவாறு மண்ணின் தன்மை அமைந்துள்ளது.

நான்கு புறமும் அமைக்கப்பட்ட மதில் சுவர்கள் 300 அடி நீளம் கொண்டவை. இதைச் சுற்றியுள்ள அகழி அகன்றும், ஆழமாகவும் காணப்படுகிறது. இக்கோட்டையின் நுழைவாயில் வடகிழக்கே அமைக்கப்பட்டிருந்தது. இந்த கோட்டை காண்பதற்குத் தேன் கூட்டினைப் போன்று இருந்தது என்றும், இதன் அமைப்பு எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்பதை ஊகித்து அறிய முடியாத நிலையில் கட்டப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய நுணுக்கம் வாய்ந்த கோட்டையை எழுப்பிய ஹேமில்டன் என்பவர் எவ்வாறு இறந்தார் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இது தொடர்பாக இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று 1791-இல் காரன்வாலீஸ் படையெடுப்பின் போது ஹேமில்டனும் அவரது இரண்டு உதவியர்களும் கொல்லப்பட்டனர் என்பது. மற்றொன்று திப்புவின் கோபத்தினால் உயிர் இழந்தார் என்பதாகும்.

ஆங்கிலேய அதிகாரி ஒய்ட் என்பவர் இது தொடர்பாகக் கூறும் பொழுது, ஒசூர் கோட்டையைத் தகர்க்க வேண்டுமெனில் அருகில் உள்ள மலை மேல் இருந்து பீரங்கி மூலம் எளிதில் தகர்த்து விடலாம் என்ற கருத்தை ஹேமில்டன் ஆங்கிலேயருக்குக் கூறி விட்டதாகச் செய்தி ஒன்று திப்புவிற்கு எட்டியது என்றும், இதனால் சினம் கொண்ட திப்பு ஹேமில்டனையும் அவரது உதவியர்களையும் கொன்று விட்டார் என்றும் கூறினார். ஆனால் இத்தகவல் பொய்யானது என்பது பின்னர் தெரிய வந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் ஒரு சுவையானத் தகவலையும் ஒயிட் அளித்துள்ளார். ஆங்கிலேயர்களால் செய்யப்பட்ட இரண்டு ரசமட்டங்களை ஒசூரில் காண நேரிட்டது என்றும், இதன் விபரம் பற்றிக் கேட்ட பொழுது இந்த ரசமட்டம் வைத்திருந்த தொழிலாளி அது ஹேமில்டனால் தனக்கு அளிக்கப்பட்டதாகக் கூறியதாகவும் தெரிவிக்கிறார்.

## அங்குசகிரி

யானைப்பாகனின் அங்குசத்தைப் போன்று இந்த மலை காணப் படுவதால் அங்குசகிரி என்று பெயர் பெற்றிருக்கலாம் என்று கருது கின்றனர். இப்பகுதி, பேரிகைப் பாளையக்காரர்களின் பழைய தலைநகரமாக இருந்தது. இங்குள்ள கோட்டைப் பகுதிகளைக் குந்தானியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட அங்குசராயலு என்ற அரசன் கட்டத் துவங்கினான் என்றும் இவன் பெயராலே இம்மலை அழைக்கப்படுகின்றது என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்த பகுதியைப் பேரிகை பாளையக்காரர்கள், அங்குசராயலு என்ற மன்னனிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் வெங்கோஜி என்ற மராட்டிய மன்னர் பேரிகைப் பகுதியை (மாஸ்தி) வென்றதால் பெத்தசொக்கக் கவுடா தன் தலைநகரை அங்குசகிரிக்கு மாற்றினான். 1766-67-இல் நான்கு மாதங்கள் கடுமையான சண்டையின் பின்னர் அங்குசகிரியைக் கைப்பற்றினான். இதனால் நாடிழந்த பாளையக்காரர்கள் சித்தூர் பகுதிக்குச் சென்றுவிட்டனர். 1799 வரை இது திப்புவின் கைவசம் இருந்துள்ளது. பின்னர் இது ஆங்கிலேயர் வசமானது.

## பேரிகை

பேரிகையும், சூளகிரியும் அங்குசகிரி பாளையத்துடன் இணைக்கப் பட்டிருந்தது. மாலூர் வட்டத்தில் அமைந்துள்ள மாஸ்தி என்ற ஊர், 16-ஆம் நூற்றாண்டில் சொக்கபாபட்டி என்பவரால் உருவாக்கப்பட்ட சிறிய பாளையமாகும். விசயநகர மன்னனான அச்சுதராயர் காலத்தில் சொக்கபாபட்டி என்பவர் புரிந்த உதவியின் காரணமாக அச்சுதராயர் 20,000 பகோடா வருமானம் உள்ள மாஸ்தியை தலைநகரமாக மாற்றினார்.

மூன்றாம் பெத்த சொக்கக்கவுடா காலத்தில் மாஸ்தி, வெங்கோஜி ராவால் கைப்பற்றப்பட்டது. மூன்றாம் பெத்த சொக்கக்கவுடாவின் மகன் நான்காம் சாதனபள்ளிக்கவுடா மாஸ்தியை மீண்டும் கைப்பற்ற எண்ணம் கொண்டான். எனவே மாஸ்தியின் மீது படையெடுத்து மராட்டியரிடம் போர் தொடுத்தான். இப்போரில் நான்காம் சாதன பள்ளிக்கவுடா இறந்ததுடன் ஆயிரக்கணக்கான வீரர்களும் மாண்டனர். இருப்பினும் மாஸ்தியைக் கைப்பற்ற இயலவில்லை. இறுதியாக இவருடைய குடும்பம் மகாராஜாக் கடைக்குச் சென்றுவிட்டது.

இந்த நேரத்தில் சாதனப்பள்ளிக்கவுடாவின் சகோதரன் கெம்பக் கவுடா மகதைப்பாளையத்தில் இருந்தான். மகதைப்பாளையத்தின் உதவியுடன் படையெடுத்து அங்குசகிரி, மகதை ஆகியவற்றைக் கைப் பற்றிக் கொண்டான். பின்னர் மகாராஜாக் கடையில் இருந்த தமது உறவினர்களை மீண்டும் அழைத்துக்கொண்டான்.

கரியப்பக் கவுடா காலத்தில் மைசூரை ஆண்ட நஞ்சராயரின் தளபதி வீரண்ணன் என்பவன் போர் தொடுத்தான். ஆனால் இப்போரில் வீரண்ணன் தோல்வியுற்றான். எனவே இருவருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது.

நான்காம் சொக்கக் கவுடா 1762 முதல் 1771 வரை இப்பாளை யத்தை ஆட்சி செய்துள்ளார்.

1766-67-இல் அங்குசகிரியை ஹைதர்அலி கைப்பற்றிக் கொண்டான்.

## சூளகிரி

சூளகிரி என்ற பெயர் திரிசூலம் என்ற பெயரில் இருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. சூளகிரியில் உள்ள கோட்டை பிற இடங்களில் காணப்படுவதைப் போன்றே அமைந்துள்ளது. இங்கு மதிற் சுவர்களும், கட்டடங்களும் காணப்படுகின்றன. இங்கு ஏராளமான பீரங்கிக் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அரண்மனைப் பகுதி சொக்கக் கவுடா காலத்தில் கட்டப்பட்டது.

17-ஆம் நூற்றாண்டில் பேரிகைப்பாளயத்திற்கு உட்பட்டிருந்த சூளகிரி தனியாகப் பிரிக்கப்பட்டது. சாதனப்பள்ளிக் கவுடாவின் சகோதரரான இரண்யகவுடா அங்குசகிரியையும் சூளகிரியையும் தனியாகப் பிரித்துத் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார்.

பின்னர் கெம்ப சொக்கக் கவுடா இந்த பாளயத்தை விசயநகர மன்னரிடமிருந்து பரிசாகப் பெற்றான். அடுத்து இப்பகுதி திப்புவின் கைக்கு மாறியது.

---

௳

# அகழ்வைப்பகம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் இயங்கி வரும் அகழ்வைப்பகத்தில் பல தொல்பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் இப்பகுதியின் வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்ளும் வகையில் இந்த அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. தருமபுரிப் பகுதியில் சேகரிக்கப்பட்ட கற்காலக் கருவிகள், சிற்பங்கள், நடுகற்கள், சுடுமண் பொம்மைகள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள் போன்றவை பார்வைக்கு உள்ளன.

சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்த பழையகற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும், அவர்களுக்குப் பின்னர் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும் தனியாக ஒரு காட்சிப் பேழை உள்ளது. 2300 ஆண்டுகளுக்கு முன் இறந்தவர்களைப் புதைக்கும் தாழி, பேழை போன்றவைகளும், அவர்கள் பயன்படுத்திய மட்கலங்களும் நம்மை வியப்பில் மூழ்கடிக்கின்றன. கிண்ணங்கள், பானைகள், தாங்கிகள் போன்றவை மண்ணால் செய்யப்பட்டு சுட்டப்பட்டுள்ளன. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய இரும்புப் பொருட்களான கத்தி, குத்துவாள் போன்ற ஆயுதங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புலி, பன்றி போன்ற விலங்குகளுடன் போரிட்டு உயிர் நீத்த வீரர்களின் சிற்பங்களுடனும், கல்வெட்டுக்களுடனும் கூடிய நடுகற்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. கணவன் இறந்ததும் தன்னுயிர் நீத்த பெண்களுக்கு எடுக்கப்பட்ட சதிக்கற்களும், தன் தலையை அரிந்து கொடுத்த நவகண்டச் சிற்பங்களும் தருமபுரி மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் தென்முகக்கடவுள், துர்க்கை, காளி போன்ற சிற்பங்களும் இப்பகுதியின் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. சமண தீர்த்தங்கரர், புத்தரின் சிற்பங்கள் ஆகியவை வேலைப்பாடுகளுடன் கூடியன. இச்சிற்பங்களும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பண்டைய நாளில் மண்ணால் ஆபரணங்கள் செய்து உபயோகித்துள்ளனர். காதணிகள், மணிகள், புகைப்பிடிக்கும் புகைப்பான்கள் ஆகியவை இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சங்கு வளையல்களும், சுடுமண் கூரை ஓடுகளும் காட்சியளிக்கின்றன.

பண்டைத் தமிழ் எழுத்துக்களின் உருவ அமைதி எவ்வாறு இருந்தன, பின்னர் நூற்றாண்டுதோறும் எவ்வாறு மாறுபட்டு வளர்ச்சியடைந்தது என்பதைக் கல்வெட்டுக்களின் துணையுடன் அறிய முடிகின்றது. இதன் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ வளர்ச்சி நிலைகள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

வெள்ளைத் தாள் கண்டுபிடிப்பதற்கு முன்னர் ஓலையில் எழுதும் வழக்கம் இருந்து வந்தது. இதைத்தான் ஓலைச் சுவடிகள் என்று கூறுகின்றோம். இந்த அகழ்வைப்பகத்தில் தமிழ், தெலுங்கு எழுத்துக்களில் ஓலைச் சுவடிகள் பல இருக்கின்றன. தெலுங்கில் இராமாயணம், தமிழில் உள்ள மருத்துவ நூல்கள், கந்தர் அனுபூதி, முருகன் அகவல், அர்ச்சுனன் தபசு போன்ற ஓலைச் சுவடிகள் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுடன் வியத்தகு அமைப்பில் அமைந்த இராவணன் மரச்சிற்பம், ஆங்கிலேயர் காலத்திய போர்க் கருவிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள் போன்றவைகளும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வகழ்வைப்பகம் காலை 9-45 முதல் பிற்பகல் 5-45 முடிய இயங்கும். வெள்ளிக்கிழமைகளிலும், முக்கிய அரசு விடுமுறை நாட்களிலும் அகழ்வைப்பகம் இயங்காது.

———

# புதிய கண்டுபிடிப்புகள்

## கற்காலக் கருவிகள்

கிருட்டினகிரி வட்டம், வரட்டனப்பள்ளி மலையின் அடிவாரத்தில் கற்கருவிகளைச் செய்த தொழிற்பட்டறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கற்கால மக்கள் சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துள்ளனர்.

## குத்துக்கல்

பாலக்கோடு வட்டத்திலுள்ள திருமல்வாடிக்கருகில் பெருங் கற்கால வகையைச் சார்ந்த குத்துக்கல் என்ற சின்னம் கண்டறியப் பட்டுள்ளது. இக்குத்துக்கல்லின் உயரம் 11 அடியாகும். இதனருகில் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வட்டங்கள் உள்ளன.

## ஈமப்பேழை

கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள கொங்கன்பாளையம் என்ற பகுதியிலிருந்து ஈமப்பேழை ஒன்று சேகரிக்கப்பட்டுள்ளது. இது இருபத்து நான்கு கால்களுடன் கூடியது. இதனுடன் அக்கால மட்கலங்களும், இரும்புப் பொருட்களும் கிடைத்துள்ளன. இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

## உரோமானியக் காசு

உரோமானியரின் வெள்ளிக் காசு ஒன்று பாலக்கோடு அருகில் சேகரிக்கப்பட்டுள்ளது. இது டைபீரியஸ் என்ற உரோமானிய மன்னன் வெளியிட்டது. முன் பக்கம் அரசனின் உருவமும், பின் பக்கம் அரசியின் அமர்ந்த நிலையும் காட்டப்பட்டுள்ளன.

## சுடுமண் பொம்மை

அரூர் வட்டம், வெங்கடசமுத்திரம் அருகிலுள்ள வாணியாற்றங் கரையில் சுடுமண் பாவை ஒன்று கிடைத்துள்ளது. தாய் ஒருத்தி தனது குழந்தைக்குப் பாலூட்டும் நிலையில் உள்ளது. இதனுடைய உருவ அமைதி, ஆடை அமைப்பு ஆகியவை கொண்டு இச்சுடுமண் பொம்மை ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருத இடமளிக்கிறது.

---

